

# வண்ணை வைத்தீஸ்வரன் நினைவு மலர்

## Souvenir in remembrance of Late

## Mr. N.S. Vaitheswaran

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BAHAVATH GEETH

## THE ABSOLUTE KNOWLEDGE

I shall now declare unto you in full this knowledge both phenomenal and noumenal, by knowing which there shall remain nothing further to be known.

out of many thousands among men, one may endeavor for perfection, and of those who have achieved perfection, hardly one knows Me in truth.

Earth, water, fire, air, ether, mind, intelligence and false ego-altogether these eight comprise My separated material energies.

Besides this inferior nature, O mighty-armed Arjuna, there is a superior energy of Mine, which are all living entities who are struggling with material nature and are sustaining the universe.

Of all that is material and all that is spiritual in this world, know for certain that I am both its origin and dissolution.

O! conquerer of wealth, there is no Truth superior to Me. Everything rests upon Me, as pearls are strung on a thread.

O! son of Kunti, I am the taste of water, the light of the sun and the moon, the syllable om in the Vedic mantras; I am the sound in ether and ability in man.

I am the original fragrance of the earth, and I am the heat in fire. I am the life of all that lives, and I am the penancesof all ascetics.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O! son of Prtha, know that I am the original seed of all existences, the intelligence of the intelligent, and the prowess of all powerful men.

I am the strength of the strong, devoid of passion and desire. I am sex life which is not contrary to religious principles, O Lord of the Bharathas.

All states of being-be they of goodness, passion or ignorance - are manifested by My energy. I am, in one sence, everything - but I am independent. I am not under the modes if this material nature.

Deluded by the three modes {goodness, passion and ingnorance}, the whole world does not know Me who am above the modes and inexhaustible.

This divine energy of Mine, consisting of the three modes of material nature, is difficult to overcome. But those who have surrendered unto Me can easily cross beyond it.

Those miscreants who are grossly foolish, lowest among mankind, whose knowledge is stolen by illusion, and who partake of the atheistic nature of demons, do not surrender unto Me.

O best among the Bharatas, four kinds of pious men render devotinal servise unto Me-the distressed, the desirer of wealth, the inquisitive, and he who is searching for knowledge of the Absolute.

Of these, the wise one who is in full knowledge in union with Me through pure devotional service is the best. For I am very dear to him, and he is dear to Me.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

All these devotees are undoubtedly magnanimous souls, but he who is situated in knowledge of Me I consider verily to dwell in Me. Being engaged in My transcendental service, he attains Me.

After many births and deaths, he who is actually in knowledge surrenders unto Me, knowing Me to be the cause of all causes and all that is. Such a great soul is very rare.

Those whose minds are distorted by material desires surrender unto demigods and follow the particular rules and regulations of worship according to their own natures.

I am in everyone's heart as the Supersoul. As soon as one desires to worship the demigods, I make his steady so that he can devote himself to some particular deity.

Endowed with such a faith, he seeks favors of a particular demigod and obtains his desires. But in actuality these benefits are bestowed by Me alone.

Men of small intelligence worship the demigods, and their fruits are limited and temporary. Those who worship the demigods go to the planets of the demigods, but My devotees ultimately reach My supreme planet.

Unintelligent men, who know Me not, think that I have assumed this from and personality. Due to their small knowledge, they do not know My higher nature, which is changeless and supreme.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I am never manifest to the foolish and unintelligent. For them I am covered by My eternal creative potency and so the deluded world knows Me not, who am unbron and infallible.

O Arjuna, as the Supreme Personality of Godhead, I know everything that has happened in the past, all that is happening in the present, and all things that are yet to come. I also know all living entities: but Me no one knows.

O scion of Bharata, O conquerer of the foe, all living entities are born into delusion, overcome by the dualities of desire and hate.

Persons who have acted piously i previous lives and in this life, whose sinful actions are completely eradicated and who are freed from the duality of delusion, engage themselves in My service with determination.

Intelligent persons who are endeavoring for liberation from old age and death take refuge in Me in devotional service. They are actually Brahman because they entirely know everything about transcendental and fruitive activities.

Those who know Me as the Supreme Lord, as the governing principle of the material manifestation, who know Me as the one underlying all the demigods and as the one sustanining all sacrifices, can with steadfast mind, understand and know Me even at the time of death.

Lord Krishna in Geetha



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் திரு நாகமணி சண்முகம் வைத்தீஸ்வரன்

தோற்றம்
07-05-1931

மறைவு
17-05-1997

## திதி வெண்பா

ஆண்டு ஈசுர அதில் வரும் வைகாசிதனில்
மோட்ச ஏகாதசி திதிதனிலே - நீண்ட புகழ்
பெற்ற சண்முகம் வைத்தீஸ்வரன்
நல்லிறைவன் தாள் சேர்ந்த நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணை வைத்தீஸ்வரன்

யாழ் வண்ணை வாழ் உடையார் வீரகத்திப்பிள்ளை அவர்கள் வழித் தோன்றலாக திரு. நாகமணி சண்முகம் அவர்களுக்கும், உடுவில் காசிநாதர் சின்னத்தம்பு மகள் நல்லம்மாவிற்கும் ஏக புதல்வனாக, வள்ளிநாயகி அரியரத்தினம், வாலாம்பிகை யோகராஜா ஆகிய இரு தமக்கையரையும், நீலாம்பிகை பினாகபாணி, காலஞ்சென்ற சர்வலோகநாயகி ஆகிய இருவரையும் தங்கையராகவும் கொண்டு திரு. வைத்தீஸ்வரன் அவர்கள் 1931ம் ஆண்டில் வைகாசித்திங்கள் ஏழாம் நாள் இப் பூமிதனில் ஜனனம் ஆனார்.

தம் கல்வியை யாழ் இந்துக்கல்லூரியில் தொடங்கிய இவர் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை வரை படித்து சிறப்புச் சித்தியுடன் தேறினார். அன்றைய சமூகசூழலுக்கமைய தந்தையாரின் விருப்பப்படி 1950ம் ஆண்டில் அரச எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்து கொழும்பு கச்சேரியில் தம் பணியைத் தொடங்கினார். அவர் தொடர்ந்து யாழ்ப்பாணம், மாத்தளை கச்சேரிகளிலும் சேவையாற்றி இருக்கிறார்.

தாம் மேலும் கற்று பட்டயக் கணக்காளராக ஆக விரும்பிய வைத்தீஸ்வரன் தமது அரசாங்க சேவையினின்றும் ஓய்வுபெற்று, 1961ல் சாம்பமூர்த்தி அன் கொம்பனியில் சேர்ந்தார். 1966ல் தமது பட்டயப் படிப்பை முடித்துக்கொண்டு சினமாஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தில் கணக்காளராகப் பணியேற்றார்.

அன்னார் தமது தாய்வழி மாமனாரான வைத்திய கலாநிதி ஆறுமுகம் அவர்களுடைய ஏகபுதல்வியான தங்கராணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து தமது இல்லற வாழ்வைத் தொடங்கினார். இல்லறத்தின் பேறாக ஒரு புதல்வியையும், இரு புதல்வர்களையும் பெற்றார்.

தமது சகோதர உறவுகள் நிலைத்து நிற்க தமது ஒரே மகளான பகீரதியை தமது மூத்த சகோதரி வள்ளிநாயகி அரியரத்தினத்தின் மூத்த புதல்வரான அரியகுமாருக்கு திருமணஞ் செய்து வைத்து நிறைவு கண்டார். அவர்கள் மூலம் கார்த்திக், காயத்திரி எனும் இரு பேரக்குழந்தைகளையும் பெற்று இன்புற்றார்.

மூத்தமகன் ராஜகுமார் - மஞ்சுளாவை திருமணங் செய்து வெளிநாட்டில் வசிக்கிறார். இளைய புதல்வர் ராஜராஜன் கொழும்பில் ஒரு தனியார் நிறுவனத்தில் உயர் பதவி வகிக்கிறார்.

வைத்தீஸ்வரன் 1951ல் தமது தந்தையார் காலமான பின் முழுக்குடும்பப் பொறுப்பையும் தாமே தாங்கி தமது சகோதரிகளை திருமணஞ் செய்வித்து நல்நிலைப் படுத்தியதுடன் தாமும் நல்ல தோர் இல்லறத்தை நடத்தி ஒரு நிறை வாழ்வு வாழ்ந்தார்.

முருக பக்தனான அவர் 21 ஆண்டுகளாக கந்தசஷ்டி விரதத்தை தவராது அனுட்டித்து வந்தவர். நல்லூர் முருகனிடத்தில் அளவிலா அன்பும் பக்தியும் கொண்டவர். தம இறுதி நாட்களில் முருகன் திருநாமத்தையே வாயார மனதார ஜபித்தவாறு இறையடி சேர்ந்தார்.

அவரது தூய நினைவின் சான்றாக இம்மலரை அவர்தம் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

தேவராய சுவாமிகள்

காப்பு

அமரர்இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சேகுறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பாவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வாகனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென்று வந்து
வரவரவேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீராநமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயாவருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்ட இலங்க
விரைந்து எனைக்காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயந்து அழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணிபூண்ட நவரத்ன மாலையும்
முப்புரிநூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடையதிருவயிறு உந்தியும்
துவண்டமருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இரு தொடை அழகும் இணைமுழந்தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடியதனில் சிலம் பொலிமுழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகமொக
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முரகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரம்மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இருண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்ரவேல் காக்க
அரை இருள் தன்னில் அனைய வேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப்பேய்களம் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் மட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடு விடு வேலை வெருண்டு ஆது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒரதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளிபவனே
சரவண பவனே திகழொளி பவனே
பரிபுரபவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனேகதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பாகடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவின்ன குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரசஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்ததாக வேலாயுதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அருளிக்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது ஆகி
கந்த சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்ட திக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் வெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெரண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்து அடி
அறிந்து எனதுள்ளம் அட்டலக்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்து உணவாகச்
சூரபத் மாவைத்துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகாபோற்றி
இடும்பா போற்றி இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
உயர்கிரிகனக சபைக்கோர் அரசே
மயில் நடம் இடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரணம் பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா அஷ்டகம்

இன்ப நலன் அளிப்பவளை
        இனியனவே தருபவளை
அன்புடைய அன்னையவளை
        அருஞ்சிவனை மணந்தவளை
என்னுடைய இதயத்தே
        பொன்னுயிராய் இருப்பவளை
நன்மலரால் பூசித்தே
        நமோதுர்க்கா யென்றிடுவேன். 1

துங்கவெழிற் கரிமுகனைத்
        துர்க்கைநீ யீன்றெடுத்தாய்:
சங்கரனார் தாண்டவத்தில்
        சக்தியேநீ பங்கெடுத்தாய்:
பொங்குசினப் போரினில்
        பொருந்த நீ யிருந்திட்டாய்:
தங்கிடுவாய் எங்குலத்தில:
        தவஒளியே துர்க்கையளே. 2

இசைதந்து இல்வாழ்வின்
        இடர்நீக்கிக் காப்பவளே
விசையுடனே மணமாலை
        விருப்பமொடு அளிப்பவளே,
திசையெல்லாம் திருவிளங்கத்
        திருவடியால் நடந்தவளே
அசைவற்ற பொருளதையும்
        ஆட்சிசெய்வாய் துர்க்கையளே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியன விரும்பியன
வேண்டியவா றளித்திடுவாய்
காண்டிபத்தைக் கதையதனைக்
காந்திமிகு சூலமதை
ஆண்டருளும் அன்னையவள்
ஆட்சிசெய்ய ஏந்திட்டாள்:
தூண்டாநல் மணிவிள்க்கைத்
தூயதுர்க்கைத் தாயென்போம். 4

உலகையிவள் ஈன்றெடுத்தாள்
உடமைமிகத் தானளித்தாள்
கலகமிடும் கள்ளாக்க
கலிமாய்த்துக் கவியிசைத்தாள்:
திலகஒளி நுதலுடையாள்
திருநிறைந்த வடிவுடையாள்
அலகில் நலம் அளிப்பவளை
அன்னைஸ்ரீதுர்க கையென்போம். 5

சுந்தரத்துக் கந்தனையே
சுடர் சூட்டி ஈன்றவளார்?
விந்தை மிகப் பொங்கிடவே
விளங்குநலம் தருபவளார்?
அந்த மொடு ஆதியின்றி
அன்னையென வளர்ந்தவளார்?
சந்தமிகப் பொலிகின்ற
சக்திஸ்ரீதுர்க்கையென்போம். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமொடு செல்வாக்கைச்
　　செயம்பெறவே தந்தவளை
நல்லறிவும் நல்லொளியும்
　　நல்லனவும் நிறைந்தவளை
வெல்லுகின்ற வழியாளை
　　செஞ்சுடரின் விழியாளைச்
சொல்மலரால் பூசித்து
　　சொர்ணஒளிபெற்றிடுவோம். 7

குமரிமுனை நிற்கின்ற
　　குலவிளக்கே துர்க்கையளே
சமயமதில் வழிகாட்டும்
　　சண்டிகையே துர்க்கையளே
சமயமதில் வழிகாட்டும்
　　சண்டிகையே துர்க்கையயே:
இமயமுகில் துர்க்கையளே
　　இணையடிகள் வாழியவே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருவத்தூர் அம்பாள் 108 போற்றி

1. ஓம் ஓம்சக்தியே போற்றி ஓம்
2. ஓம் ஓங்கார ஆனந்தியே போற்றி ஓம்
3. ஓம் உலக நாயகியே போற்றி ஓம்
4. ஓம் உறவுக்கும் உறவானவளே போற்றி ஓம்
5. ஓம் உள்ளமலர் உவந்தவளே போற்றி ஓம்
6. ஓம் ஓதரிய பெரும் பொருளே போற்றி ஓம்
7. ஓம் உண்மைப் பரம் பொருளே போற்றி ஓம்
8. ஓம் உயிராய் நின்றவளே போற்றி ஓம்
9. ஓம் மருவத்தூர் அமர்ந்தாய் போற்றி ஓம்
10. ஓம் மனமாசைத் துடைப்பாய் போற்றி ஓம்
11. ஓம் கவலை தவிர்ப்பாய் போற்றி ஓம்
12. ஓம் ககனவெளி ஆனாய் போற்றி ஓம்
13. ஓம் புற்றாகி வந்தவளே போற்றி ஓம்
14. ஓம் பாலாகி வடிந்தவளே போற்றி ஓம்
15. ஓம் பாமரர் துயர் துடைப்பாய் போற்றி ஓம்
16. ஓம் பண்ணாக இசைத்தாய் போற்றி ஓம்
17. ஓம் பாமலர் உவந்தாய் போற்றி ஓம்
18. ஓம் பாம்புரு ஆனாய் போற்றி ஓம்
19. ஓம் சித்துரு அமைந்தாய் போற்றி ஓம்
20. ஓம் செம்பொருள் நீயே போற்றி ஓம்
21. ஓம் சத்தியே தாயே போற்றி ஓம்
22. ஓம் சன்மார்க்க நெறியே போற்றி ஓம்
23. ஓம் சமதர்ம விருந்தே போற்றி ஓம்
24. ஓம் ஓங்கார உருவே போற்றி ஓம்
25. ஓம் ஒருதவத்துக் குடையாய் போற்றி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ஓம் நீள்பசி தவிர்ப்பாய் போற்றி ஓம்
27. ஓம் நிம்மதி தருவாய் போற்றி ஓம்
28. ஓம் அகிலமே ஆனாய் போற்றி ஓம்
29. ஓம் அண்டமே விரிந்தாய் போற்றி ஓம்
30. ஓம் ஆன்மீக செல்வமே போற்றி ஓம்
31. ஓம் அனலாக ஆனாய் போற்றி ஓம்
32. ஓம் நீராக நிறைந்தாய் போற்றி ஓம்
33. ஓம் நிலனாகத் திணிந்தாய் போற்றி ஓம்
34. ஓம் தூறாக வளர்ந்தாய் போற்றி ஓம்
35. ஓம் துணிபொருள் நீயே போற்றி ஓம்
36. ஓம் காராக வருவாய் போற்றி ஓம்
37. ஓம் கனியான மனமே போற்றி ஓம்
38. ஓம் மூலமே முதலே போற்றி ஓம்
39. ஓம் முனைச்சுழி விழியே போற்றி ஓம்
40. ஓம் வீணையே இசையே போற்றி ஓம்
41. ஓம் விரைமலர் அணிந்தாய் போற்றி ஓம்
42. ஓம் தத்துவங் கடந்தாய் போற்றி ஓம்
43. ஓம் சகலமறைப் பொருளே போற்றி ஓம்
44. ஓம் உத்தமி ஆனாய் போற்றி ஓம்
45. ஓம் உயிர்மொழிக் குருவே போற்றி ஓம்
46. ஓம் நெஞ்சம் நீ மலர்வாய் போற்றி ஓம்
47. ஓம் நீள் நிலத் தெய்வமே போற்றி ஓம்
48. ஓம் துரிய நிலையே போற்றி ஓம்
49. ஓம் துரியா தீத வைப்பே போற்றி ஓம்
50. ஓம் ஆயிர இதழ் உறைவாய் போற்றி ஓம்
51. ஓம் அகிலமெலாம் ஆட்டுவிப்பாய் போற்றி ஓம்
52. ஓம் கருவான மூலம் போற்றி ஓம்
53. ஓம் உருவான கோலம் போற்றி ஓம்
54. ஓம் சாந்தமே உருவாய் போற்றி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. ஓம் சரித்திரம் மறைத்தாய் போற்றி ஓம்
56. ஓம் சின்முத்திரை தெரிப்பாய் போற்றி ஓம்
57. ஓம் சினத்தை வேரறுப்பாய் போற்றி ஓம்
58. ஓம் கையிரண்டும் உடையாய் போற்றி ஓம்
59. ஓம் கரைகபுரண்ட கருணை போற்றி ஓம்
60. ஓம் மொட்டுடைக் கரத்தாய் போற்றி ஓம்
61. ஓம் மோனநல் தவத்தாய் போற்றி ஓம்
62. ஓம் யோகநல் உருவே போற்றி ஓம்
63. ஓம் ஒளியென ஆனாய் போற்றி ஓம்
64. ஓம் எந்திரத் திருவே போற்றி ஓம்
65. ஓம் மந்திரத் தாயே போற்றி ஓம்
66. ஓம் பிணி தவிர்த்திடுவாய் போற்றி ஓம்
67. ஓம் பிறவிநோய் அறுப்பாய் போற்றி ஓம்
68. ஓம் மாயவன் தங்கையே போற்றி ஓம்
69. ஓம் சேயவன் தாயே போற்றி ஓம்
70. ஓம் திரிபுரத்தாளே போற்றி ஓம்
71. ஓம் ஒருதவம் தெரிப்பாய் போற்றி ஓம்
72. ஓம் வேம்பினை ஆள்வாய் போற்றி ஓம்
73. ஓம் வினையெலாம் தீர்ப்பாய் போற்றி ஓம்
74. ஓம் அஞ்சனம் அருள்வாய் போற்றி ஓம்
75. ஓம் ஆருயிர் மருந்தே போற்றி ஓம்
76. ஓம் கண்ணொளி காப்பாய் போற்றி ஓம்
77. ஓம் கருத்தொளி தருவாய் போற்றி ஓம்
78. ஓம் அருள்ஒளி செய்வாய் போற்றி ஓம்
79. ஓம் அன்பொளி கொடுப்பாய் போற்றி ஓம்
80. ஓம் கனவிலே வருவாய் போற்றி ஓம்
81. ஓம் கருத்தில் நுழைவாய் போற்றி ஓம்
82. ஓம் மக்களைக் காப்பாய் போற்றி ஓம்
83. ஓம் மனநோயைத் தவிர்ப்பாய் போற்றி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. ஓம் எத்திசையும் ஆனாய் போற்றி ஓம்
85. ஓம் இதயமாம் வீணை போற்றி ஓம்
86. ஓம் உருக்கமே ஒளியே போற்றி ஓம்
87. ஓம் உள்ளுறை விருந்தே போற்றி ஓம்
88. ஓம் மலப்பிணி தவிர்ப்பாய் போற்றி ஓம்
89. ஓம் மனங்கனிந்து அருள்வாய் போற்றி ஓம்
90. ஓம் நாதமே நலமே போற்றி ஓம்
91. ஓம் நளின மலர் அமர்வாய் போற்றி ஓம்
92. ஓம் ஒற்றுமை சொல்வாய் போற்றி ஓம்
93. ஓம் உயர்நெறி தருவாய் போற்றி ஓம்
94. ஓம் நித்தமுங் காப்பாய் போற்றி ஓம்
95. ஓம் நேரமும் ஆள்வாய் போற்றி ஓம்
96. ஓம் பத்தினி பணிந்தோம் போற்றி ஓம்
97. ஓம் பாரமே உனக்கே போற்றி ஓம்
98. ஓம் வித்தையே விளக்கே போற்றி ஓம்
99. ஓம் விந்தையே தாயே போற்றி ஓம்
100. ஓம் ஏழையர் அன்னை போற்றி ஓம்
101. ஓம் ஏங்குவோர் துணையே போற்றி ஓம்
102. ஓம் காலனைப் பகைத்தாய் போற்றி ஓம்
103. ஓம் கண்மணி ஆனாய் போற்றி ஓம்
104. ஓம் சதியப் பொருளே போற்றி ஓம்
105. ஓம் சங்கடந் தவிர்ப்பாய் போற்றி ஓம்
106. ஓம் தத்துவச் சுரங்கமே போற்றி ஓம்
107. ஓம் தாய்மையின் விளக்கமே போற்றி ஓம்
108. ஓம் ஆறாதார நிலையே போற்றி ஓம்

ஓம் சக்தி - ஓம் சக்தி - ஓம் சக்தி
ஓம் சக்தி - ஓம் சக்தி - ஓம் சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றார் உறவினர் புலம்பல்

## மனைவி புலம்பல்

மங்கலநாண் எந்தனுகக்கு மகிழ்வுறவே தரித்து மணந்தகாலை
இங்கிதமாய் உனைப்பிரியேன் என்றிசைத்த இன் மொழியும்
மங்கிடவே நீ மறைந்தாய் மக்களுடன் வருந்துகின்றேன்
எங்கினிநான் கண்டுவப்பேன் ஏதுபிழை செய்தேன் இயம்பிடாயே

## மகள் புலம்பல்

ஆசையுடன் பெற்ற அருங்கலையோடு அணியாடையெலாம்
நேசமுடன் யான் நினைத்தது தந்தெனை நெஞ்சில் வைத்தாய்
பாசமுடன் எனைப் பார்த்தவுன் போலினி யாருளரோ
பாசமுடன் பாவியென்று காண்பேன் உனைவையகத்தே.

## மக்கள் பிரலாபம்

தந்தை மகற்குத் தரும்பணி ஏதும் தவறிடாமல்
முந்தவே செய்து முதற்கலையூட்டி முன்னேற வைத்தாய்
எந்தையே எங்கள் பிழை பொறுத்தேயெமை ஒன்று கொண்டாய்
சிந்தை கலங்கிடுகின்றோம் கைமாறெவை செப்பிடாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

எங்கள் துயர்கண்டு நீயும் துயருற்றே ஏங்கிடுவாய்
எங்கள் சிறப்பே யுன்சிறப் பென்றுநீ உவந்திருந்தாய்
பொங்கும் புகழாய் பூபதியே எங்கள் புரவலனே
இங்கினி யாரை மாமாவென் றுரைப்போ மியம்பிடாயே.

## பேரர் புலம்பல்

அப்பா என அழைக்க ஆர்வமாய்த் தானெடுத்து
தப்பாது முத்தமிடும் பாட்டாவே - இப்பாரில்
இந்நாள் மறைந்தே நீ எங்குற்றாய் சொல்லாயோ
எந்நாளிற் காண்போ மினி.

## தேற்றம்

விண்ணுலகில் ஆறுமுகன் வேண்டும் பணிபுரிய
எண்ணி அழைத்தான் இறைவனுமே - மண்ணுலகில்
ஆசையுடன் நின்றே அழுவதனால் ஆவதில்லை
ஈசனடி ஏத்தல் இனிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# An Appreciation

Mr. Sanmugam Vaitheswaran, as I knew him was a deeply religious person who has just completed the karmic assignment on earth.

He was a courageous, down to earth person and express himself with conviction and logic.

From the time, I knew him as an accountant of Cinemas Ltd, I have admired the way he listens, carefully to others discussing a problem and then goes into half-sleep and shoots out with quick solution. Another quality admired by me is his intuitive grasping of a situation and the practical advice he gives to solutions in business practice.

He cared for the well being of his close friends and wished them success and encouragement. At times of depression Mr. Vaitheswaran's companionship and consolation has helped me to overcome many mental and physical problems

I pray that he reaches the gate - way to nirvana which he always speaks of.

D. RANJETHEN

Inner Fairline Road,
Dehiwala.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீரர் வைத்தீஸ்வரன்

"என்றோ அழிந்து போகக் கூடிய உடலுக்காக வருந்தாதே. "பார்த்தா! புமியில் உறவுகளும் அநித்தியம் உறவு பூணும் உயிர்களின் உடல்களும் அநித்தியம் என்று உணர்" என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் கூறிய தர்ம சத்தியமே ஆயினும், நாம் அறிந்து பழகிய நல்ல ஆத்மாக்கள் பிரியும் போது கவலை எம்மை ஆழ்வதை தடுப்பது சாத்தியமல்ல. திரு. வைதீஸ்வரனை ஒரு நல்ல அயலவராக, நண்பராக, பிறருக்கு தீமை நினைக்காத சாந்த சொரூபியாகத்தான் நான் அறிவேன்.

கடமையே கண்ணாக கொண்ட கருமமே வாழ்க்கையாக சதா தொழிலை அயராது செய்தல் ஒரு வகை தவம் என்பாாகள். அப்படி பாாக்கும் போது வைத்தீஸ்வரன் ஒரு யோகிதான்.

அவருக்கு மரணிக்கும் வயதல்ல, எனினும் இதைத்தீர்மானிக்க நான் யார்? விதிப்படி நடப்பதை தடுப்பார் இல்லை. என்றாலும் இப்படி அமைதி காக்கும் அருமையான மனிதர்கள் உலகில் குறைந்து போகிறார்களே என்பதுதான் பெரும் கவலை.

பொறுப்புள்ள தந்தையாக, இணைபிரியா கணவராக, நல்ல மனிதராக வாழ்ந்த அன்னாரது ஆத்துமா பிறவிப் பெருங்கடலைத் தாண்டி முக்திக்கரை சேர மனதார பிரார்த்திக்கிறேன்.

யோகா பாலச்சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பன் அமரர் சண்முகம் வைத்தீஸ்வரன்

என்னுடன் நெடுங்காலமாக நெருங்கிப் பழகிய ஓர் உண்மை நண்பன் பிரிந்துவிட்டார் என்பதை இன்னும் நம்ப முடியவில்லை. என் உள்ளத்தில் கூட இருப்பதாகவே உணர்கின்றேன். அவர் நற்குணங்களும், நற் பண்புகளும் கொண்டவர். வியக்கத்தக்க ஆர்வமும், ஊக்கமும், விடா முயற்சியும் உடைய அயராது உழைப்பாழியாக எல்லோருக்கும் ஒரு முன் மாதிரியாக திகழ்ந்தவர்.

வண்ணார் பண்ணையில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் அருகாமையில் ஆறுமுக நாவலர் மண்டபத்தில் சைவமே ஒரு கண்ணாக சைவ சித்தாந்த வகுப்புகளை நடாத்திய நாகமணி சண்முகத்தினதும், நல்லம்மாவினதும் ஏகபுத்திரன் வைத்தீஸ்வரன் ஆவார்.

இவர் 1936 ஆம் ஆண்டு முதல் யாழ் இந்து தமிழ் வித்தியா சாலையிலும், 1939 ஆம் ஆண்டு முதல் 1949 ஆம் ஆண்டு வரை யாழ் இந்துக் கல்லூரியிலும் தன் கல்வியைப் பயின்றார். 1946 இல் சிரேஷ்ட பாடசாலை தரா்தரப் பத்திரப் பரீட்சையில் (SSC-Eng.) முதல் வகுப்பிலும், 1949இல் உயர்தர பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையிலும் (HSC-Eng.) சித்திபெற்றார்.

1950 இல் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து கொழும்பு, யாழ்பாணம், மாத்தளை முதலிய இடங்களில் சேவை செய்து 1961 இல் சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிப்புற்று ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றவுடன் சாம்பமூர்த்தி பட்டைய கணக்காளர் நிறுவனத்தில் பட்டையக் கணக்காளர் படிப்பை ஆரம்பித்தார். 1966 இல் இறுதியாண்டுப் பரீட்சை முடிப்பதற்கு முன்பு சினிமாஸ் லிமிட்டட்டில் (Cinemas Ltd.) கணக்காளர் பதவியை ஏற்றார். அதே ஆண்டில் தன் மாமன் அராலியூர் கதிரத்தம்பி ஆறுமுகத்தின் மகள் தங்கராணியை திருமணம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வருடங்களின் பின் சினிமாஸ் நிறுவனத்தை விட்டு விலகித் தன்னுடைய நண்பர்களான கனகராஜா, தர்மகுலசிங்கம் முதலியோர் ஆரம்பித்த பட்டையக் கணக்காளர் நிறுவனத்தில் இணைந்து கொண்டார்.

கணக்காளர் ஆகக் கடமை ஆற்றிக்கொண்டு கிராஞ்சியில் அரசாங்கத்தால் வளங்கப்பட்ட 50 ஏக்கர் நில்தில் தென்னை, மர முந்திரிகை (Cadju) முதலிய பயிர்களை நாட்டினார். இவரது தளராத முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட இம் முதலீட்டில் இருந்து எதுவித் பயனையும் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு 1983 இல் இடம் பெற்ற வன் செயல்களின் பாதிப்பு காரண மாகியது. இதனால் ஏற்பட்ட உடல், உளப் பாதிப்புகளைத் தாங்கி மேற்கொண்டும் தளரா முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

என் போன்ற நண்பர்களையும் மற்றும் இளைஞர் களையும் ஊக்கமூட்டி உயர் கல்வியை தொடரும்படி புத்தி புகட்ட என்றும் இவர் தவறியதில்லை. தன் புன் சிரிப்பால் மற்றவர்களை கவர்ந்து விடுவார். பிறர் பிள்ளைகளையும் தன் பிள்ளைகள் போல் முன்னேற்றத்துக்குரிய பல அறிவுரைகளையும், ஊக்கத்தையும் வழங்க என்றென்றும் தயங்கியதில்லை.

இத்தகைய ஓர் உண்மை நண்பனின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. இவரின் பிரிவால் தாங்க முடியாத துயரத்தில் துவமும் சகோதரிமார் வள்ளிநாயகி, வாலாம்பிகை, நீலாம்பிகை அவர்க ளுக்கும் அவரின் அருமை மனைவி தங்கராணிக்கும், பிள்ளைகள் பகீரதி (யமுனா), இராஜ்குமார் (சுரேஸ்) இராஜராஜன் (உமேஸ்) அவர்களுக்கும் ஏனைய குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா இறையடிசேர வேண்டுகின்றேன்.

அன்பு நண்பன்
து. சி. குமரேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ACKNOWLEDGEMENT.

The family members of the late Mr. N.S. Vaitheswaran, express their sincere gratitude and thanks to all relatives & friends and all who attended the funeral, called over at their residence, sent floral, tributes, messages of condolence and assisted in the funeral arrengements at our time of bereavement.

We also wish to thank those who attended the 31st day ceremony and prayers.

Wife - Thangaranee
Children - Jamuna, Suresh & Umesh.

105/12, 5th Cross Street, Alwis town,
Hendala, Wattala.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எமது பாசமிகு கணவரினதும், தந்தையினதும் மரணச் செயிதியறிந்து நேரில் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், தொலைபேசி தந்தி மூலம் அனுதாபச் செய்தியை தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்து எங்கள் துன்பத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

மனைவி - தங்கராணி,

பிள்ளைகள் - ஐமுனா, சுரேஸ், உமேஸ்

COLOURDOTS ( PVT.) LTD., 31/21, DAWSON STREET, COLOMBO - 2.
TELEPHONE : 331439



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org